பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 06 2026** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** உலகளாவிய நெருக்கடியின்போதிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் வலியுறுத்தியுள்ளார்.

**3.** இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் உடல் அரசு மரியாதையுடன் இன்று தேனி மாவட்டம் தேவதானப்பட்டியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**4.** தமிழகத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு பிரவீன் சக்ரவர்த்தி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**5.** ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எம் ஆர் அர்ஜூன் — ஹரிஹரன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**. . . இனி விரிவான செய்திகள் . . .**

<<<<<<<>>>>>>

உலகளாவிய நெருக்கடியின்போதிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நித்தி ஆயோக் ஆட்சிமன்றக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு மத்திய — மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநிலங்கள் தகவல்களை பரிமாறி கொள்வதற்கும், ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும் நித்தி ஆயோக் அமைப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இளையோருக்கு தரமான கல்வி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வேலைவாய்ப்புகள் அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட திறன் பயிற்சி பெற்ற இளையோரின் பங்கு முக்கியமானது என்று திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்த கூட்டத்தில், தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் திரு விஜய் கலந்துகொண்டு பேசினார்.

நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமான தமிழகம் வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒன்று புள்ளி ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக முன்னேற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இளையோர், ஏழைகள், மகளிர், விவசாயிகளின் நலனுக்காக முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கல்வி, திறன் பயிற்சி, புத்தாக்கம், வேலைவாய்ப்பு அளிப்பதில் மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் தொழில் திறன் மையங்கள் அமைக்க மத்திய அரசு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறிய முதலமைச்சர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஐந்து லட்சம் இளையோருக்கு பயிற்சி அளிக்க உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் நீட் நுழைவுத் தேர்வுக்கு பதிலாக, மருத்துவப் படிப்புகளுக்கு 12-ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடத்த வேண்டும் என்று திரு விஜய் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு விவசாயிகளின் நலனுக்காக கிஷான் சம்ரிதி திட்டத்தை செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த திட்டம் தொடங்கப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இதன் மூலம் வேளாண் தொழில் வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

வேளாண் துறையில், அறிவியல் தொழில்நுட்பம், நவீன மயமாக்கல், ஒட்டுமொத்த வளர்ச்சி மூலம் விவசாயிகளின் வருவாய் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசு விவசாயிகளின் நலனுக்காக செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களையும் டாக்டர் எல்.முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழகத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு பிரவீன் சக்ரவர்த்தி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வரும் 18-ஆம் தேதி இதற்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திரு பிரவீன் சக்ரவர்த்தியின் வேட்புமனு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்களை இன்று பிற்பகல் 3 மணிவரை திரும்பப் பெறலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இதனையடுத்து, திரு பிரவீன் சக்ரவர்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் நடத்தும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக-வின் திரு சி வி சண்முகம் சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, தமது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

இதனையடுத்து, தமிழகத்தில் மாநிலங்களவை உறுப்பினருக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது.

<<<<<<<>>>>>

குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்க அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கு துணை நின்று குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ நா சார்பில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் நாளை கடைபிடிக்கப்படுவதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் பருவத்தில் குடும்ப சூழ்நிலைகளால் வேலைக்கு செல்கின்ற குழந்தைகளை அக்கொடுமையிலிருந்து விடுவித்து முறையான கல்வியினை வழங்குவது நம் கடமையாகும் என்று தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குழந்தைக்கும் சுதந்திரமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை அவசியமானது என்று அவர் கூறியுள்ளார்.

இவற்றை வழங்க மறுப்பது சமூக நீதிக்கு எதிரானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளை தொழில் பணிகளில் ஈடுபடுத்தாமல், அவர்களுக்கான உரிமைகளை பேணிகாத்து முறையான கல்வி அளித்து வளமான எதிர்காலத்தை உருவாக்குவதையே அரசு தனது முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது என்று திரு விஜய் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

மகளிரின் பாதுகாப்பில் முதலமைச்சர் அக்கறை செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஸ்ரீவைகுண்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு முழுமையான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு காரணமான குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அறிவிக்கப்படாத மின்வெட்டால் சிறு தொழில்கள், விவசாயம், மாணவர்களின் படிப்பு என அனைத்தும் பாதிக்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுவதாக தெரிவித்துள்ளார்.

அதிக மின்தேவையை கருத்தில்கொண்டு, அது உடனே சரிசெய்யப்பட வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>

இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் உடல் அரசு மரியாதையுடன் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

தேனி மாவட்டம் தேவதானப்பட்டியில் உள்ள அவரது பண்ணை வீட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Sound Byte — பாரதிராஜா - 48 Sec. )***

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை அரசு தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தின் தரம் குறித்து மாநில அமைச்சர் திரு வெங்கட ரமணன் ஆய்வு மேற்கொண்டார்.

----------------

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் மாநில அமைச்சர் திரு வினோத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்றுவரும் கும்பாபிஷேக பணிகளை மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு ரமேஷ் ஆய்வு செய்தார்.

---------------------

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த நடைபாதை கடைகள் காவல்துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டது.

-------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் நான்கு வட்டங்களுக்கான குறைதீர் நாள் கூட்டம் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------

திருவண்ணாமலை மாவட்டம் சளுக்கை கிராமத்தில் தேனிக்கள் கொட்டியதில் மாணவர்கள் உட்பட ஆறு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் எம் ஆர் அர்ஜூன் — ஹரிஹரன் அம்சகருணன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **21-17, 21-7** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Michael Owen** — நியூசிலாந்தின் **Dylan** இணையை வென்றது.

----------------

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏ அணிக்கு எதிரான ஆட்டத்தில் **4** ரன் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் ஏ அணி டக்ஒர்த் லூயிஸ் முறைப்படி வெற்றிபெற்றது.

**<<<<<<END>>>>>**